பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞூ கார்த்திகை மீ 11 உ செவ்வாய்க்கிழமை (27-11-1990) UTHAYAN—A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 1

### இன்று அதிகாலை தியாகிகள் நினைவு ஒலி; தொடர்ந்து

# யாழ். குடாநாடு முழுவதிலும் மாவீரர் சுடர் ஒளி பிரகாசம்

## மாங்குளம் நிலை மிக கவலைக்கிடம்

### அமைச்சர் ரஞ்சனின் வேதனை

கொழும்பு, நவ: 27 ''மாங்குளம் நிலைமை மிகவும் கவலைக்கிடம்'' (''Situation is very bad'') —என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கூறியதாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' நேற்று அறிவித்தது.

மாங்குளம் இராணுவ முகாம் பறிபோனதை அவர் ஒப்புக்கொண்டிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

பெரும் எண்ணிக்கையில் மேலதிக துருப்புகள் மாங்குளத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அவர் கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஸ்ரீலங்கா அரச படைகள் மிக விரைவில் விடுதலைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 300க்கு அதிகமான சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், நவ. 27 மாங்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 300க்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருப்பதாக கருதப்படுகிறது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத் தகவலை வெளியிட்டன.

தாக்குதல் நடந்த சமயம் மாங்குளம் முகாமிலிருந்த சிப்பாய்களின் எண்ணிக்கை குறித்து முரண்பாடான தகவல்கள் கொழும்பில் வெளியிடப்பட்டு வருவதாகவும்

(6ம் ஆம் பக்கம் பார்க்க)

## 6 ஆவது அகவையில் உதயன்

அன்பார்ந்த வாசகர்களே!

உங்கள் அபிமான உதயன் இன்று — நவம்பர் 27 ஆம் திகதி — தனது ஆறாவது அகவையில் தனது செந்தளிர்ப் பாதத்தை அமைதியாக எடுத்துப் பதிக்கிறான். நேற்றுடன் அவனுக்கு ஐந்து வயது நிறைவெய்தியது. உங்களில் பலரும் அவனுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துரைகளுக்கு எங்கள் நன்றிகள்,

புதினம் சொல்லும் தனது பொறுப்பான பணியை நம்பகத்தன்மை கலந்து, ஆதாரம் அறிந்து, அலசி ஆராய்ந்து, புனிதமாக ஆற்றுவதனால் அவன் உங்கள் உள்ளங்களில் உயர் இடம் பிடித்து விட்டதை அறிந்து நாம் மகிழ்வுறுகிறோம்.

ஒரு பத்திரிகை மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை அவன் தனது முழுச் சக்தியையும் உபயோகித்து நிறைவுடன் செய்வதால், நீங்கள் அவன் மீது அன்பு செலுத்துகிறீர்கள். நன்றி கூறுகிறோம்.

ஐந்து வருடங்களில் அவன் அடைந்த முதிர்ச்சியை நீங்கள் அங்கீகரிப்பதை அறிந்து நாம் இறும்பூதெய்துகிறோம்.

கடந்த ஐந்தாண்டுப் பணியில் எமக்கு ஏற்பட்ட தடங்கல்கள், தடைகளின் மத்தியிலும் மக்கள் சேவையைத் தொடர்வதற்கு வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்களாகிய நீங்கள் நல்கிய ஒத்துழைப்பை என்றும் மறவோம்,

எல்லா இடர்களையும் நீக்கி அருளிய ஆண்டவன் அருட் கருணையின் துணையுடன், உதயன், உங்களுக்கு தொடர்ந்து நற்சேவையாற்றத் தன்னை அர்ப்பணிப்பதற்கு, உந்துதல் அளித்து உழைப்போம் என்று சங்கற்பம் செய்கிறோம்.

— நிர்வாகிகள்

## கோட்டை மைதானத்தில் தீப்பந்தம் மாவட்டத் தளபதி பானு ஏற்றினார்

யாழ்ப்பாணம், நவம்பர் 27

மண்ணுக்காக மரணித்த தியாகிகளின் நினைவாக இன்று அதிகாலையில் ஆலயங்கள், நிறுவனங்கள் தோறும் இருநிமிட நேரம் நினைவொலி எழுப்பப்பட்டது. தொடர்ந்து குடாநாடு முழுவதும் ஏற்றப்பட்ட மாவீரர் சுடர் பல திக்குகளிலும் பிரகாசித்து எரிந்தது.

யாழ். கோட்டையில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டத் தளபதி திரு. பானு மாவீரர் சுடரை ஏற்றிவைத்தார்.

கோட்டை மைதானத்தில் அலங்கரிக்கப்பட்ட கம்பத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த தீப்பந்தத்திற்கு சுடர் ஏற்றி மாவீரர்தின நிகழ்ச்சியை தளபதி பானு ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து கோட்டையைச் சூழவுள்ள சொந்தங்களில் — இதுவரை தமது இன்னுயிரைத் தியாகம்செய்த விடுதலை வேங்கைகள் நினைவாக – இரண்டாயிரத்து இருநூற்றிஐம்பது மாவீரர் சுடர்கள் ஏற்றப்பட்டன.

இந்தச் சுடர்களினால் கோட்டைச் சுற்றுப்புறம் அலங்கரிக்கப்பட்ட மதில் போல பிரகாசமாகக் காட்சியளித்தது.

இதன் பின்னர் பாடசாலை மாணவிகளின் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சி இடம் பெற்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'மாவீரர் நாள்' வடிவத்தில் பிரகாசித்த தீப்பந்தங்கள்!

யாழ்ப்பாணம், நவ. 27 யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று அதிகாலை ''மாவீரர் நாள்'' என்ற வடிவத்தில் தீப்பந்தங்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன.

தமிழீழ மண்ணுக்காக வலிகாமம் மற்றும் தீவுப் பகுதியில் இதுகால வரை உயிர் நீத்த போராளிகளின் எண்ணிக்கையைக் கொண்ட — சுமார் 300 க்கும் மேற்பட்ட தீப்பந்தங்களே இங்கு செஞ்சுடர் விட்டு ஒளிபரப்பின.

விடுதலைப் புலிகளின் பிரமுகரான பைப் அண்ணை முதற் தீப்பந்தத்தை நள்ளிரவு 12.03 மணிக்கு ஏற்றி வைத்தார்.

களப்பலியான மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் சுமார் 4 ஆயிரம் பேர் ஏனைய தீப்பந்தங்களை சம்பிரதாய பூர்வமாக ஏற்றி வைத்தனர்.

நேற்றைய காலநிலையிலும் கைக்குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை இந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27 மாவீரர் வாரத்தை முன்னிட்டு வலிகாமம், தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கு விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.

பின்னர் இவர்கள் அனைவரும் இன்று அதிகாலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 'மாவீரர் சுடர்' ஏற்றும் நிகழ்ச்சிக்கு மினிபஸ்களில் வரிசையாக அழைத்து வரப்பட்டனர். [உ-6]

## 2 நிமிடங்கள் மணி ஓசை

யாழ்ப்பாணம், நவ. 27 இன்று அதிகாலை மாவீரர் தினம் பிறந்தபோது குடாநாடு எங்கும் தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் நிறுவனங்களில் தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் மணிகள் ஒலித்தன.

அதிகாலை 12-01 மணி முதல் 12-03 மணி வரை ஒரே சீராக மாவீரர் நினைவொலி எழுப்பப்பட்டபோது பொது இடங்களில் கூடியிருந்த மக்கள் எழுந்து நின்று மண்ணுக்காக மரணித்த தியாகிகளுக்காக மௌனாஞ்சலி செலுத்தினர்.

மாவீரருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் யாழ் நகரத்தில் மட்டுமல்லாமல் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் – நள்ளிரவு வேளையிலும், மக்கள் பெரும் ஆர்வத்துடன் பங்குபற்றியதாகக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ.)

## கட்டுவனில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 27 கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் ஞாயிறு இரவும் நேற்றுப் பகலும் மோதல்கள் இடம்பெற்றன.

மோதல்களை அடுத்து முகா[illegible] பகுதிகளில் விழுந்து வெடித்தன. (உ-3)

## கோமரங்கடவலவில் ஆறு புலிகள் வீரமரணம்

### 9 சிப்பாய்கள் பலி; மூவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 27 கடந்த சனியன்று திருகோணமலை மாவட்டத்தில் சின்னமதவாச்சிக்கும், கோமரங்கடவலவுக்கும் இடையில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் உயிரிழந்த சிப்பாய்களின் எண்ணிக்கை 9 என்று சொல்லப்படுகிறது; 5 சிப்பாய்கள் காயமுற்றனர். விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் றோயல் (சண்முகராஜா விக்னேஸ்வரன் - திரியாய்) வீரமரணமடைந்தார்.

இந்தத் தாக்குதல் நடந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி பின்னர் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஐவர் வீரமரணமடைந்தனர். அந்த மோதலில் இராணுவத்துக்கு ஏற்பட்ட சேதவிவரம் தெரிய வரவில்லை.

முதல் தாக்குதலின்போது ரி 56 ரகத் துப்பாக்கிகள் -3, 303 ரக ரைபிள்கள் - 2, ஐ. எம். ரவைகள் - 300, 303 ரக

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 2

27/11/1990

## சின்னஞ் சிறு விளம்பரம்


### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இணை: பிரதான வீதி, யாழ்ப்பாணம் (C/5398)

### "சாயி ரைப்பிங் சென்ரர்"

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் 1-12-90 இல் ஆரம்பம். மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலை நயம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சாயி ரைப்பிங் சென்ரர், நுணாவில் சந்தி சாவகச்சேரி (14839)

### சேவை

காலை 7 மணி முதல் 5 மணி வரை போட்டோ ஸ்ரட் (A4 ஒரு பக்கம் ரூபா 5/- மட்டுமே) றோனியோ வேலைகள் அனைத்தும் உடனுக்குடன் செய்து கொள்ள சண்முகம் றேட்ஸ் 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (14738)

### முடிவல்ல ஆரம்பம்

மீராவெளியீடு சிதம்பரா திருச்செந்திநாதன் எழுதிய போராளி என்பவன் இதயமில்லாதவனா? இல்லை கணநாதன் கடைசிப்பயணத்தில் நினைவு கூர்ந்து பேசுகிறானே அப்போதுமானும் வடிக்கின்ற கண்ணீரோடு அவனுக்குத் தலை வணங்கும் 25/- ரூபா தர்க்காஸ் ரசனோஸ் சுன்னாகம் திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீ ராம் புத்தகசாலை நல்லூர் (14951)

### ஜோதிட சேவை

ஜோதிட சாஸ்திரத்தில் அனுபவமிக்க முதிர்ந்த ஜோதிடர் ஆயர்பாடி ஸ்ரீ வே. த. பயிர்வாகனம் அவர்களை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி கோவில் பிள்ளையார் கோவில் வீதி 52 ஆம் இலக்கத்தில் சந்திக்கலாம். (14842)


# கரும்புலி போர்க்கின் புகழுடலுக்கு வன்னிப் பிராந்தியத்தில் அஞ்சலி

கிளிநொச்சி நவ. 27

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணம் அடைந்த கரும்புலி லெப். கேர்ணல் போர்க் [சேமமடு - வவுனியா] அவர்களின் புகழுடம்பு வன்னிப் பிராந்தியம் முழுவதும் மக்களின் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்படுகிறது.

வெடி மருந்து நிரம்பிய வாகனத்துடன் மாங்குளம் இராணுவ முகாமில் புகுந்த லெப். கேர்ணல் போர்க் வாகனம் வெடித்து சிதறும்போது அருகில் இருந்த பங்கர் ஒன்றுக்குள் பாய்ந்ததால் அவரது புகழுடம்பு சிதைவுறாது பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்கின் புகழுடம்பு கிளிநொச்சியில் பல இடங்களிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது ஏராளமான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இதேபோல் முல்லைத்தீவு, வவுனியாப்பகுதிகளிலும் புகழுடம்பு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

லெப் கேர்ணல் போர்க் முல்லைத்தீவு மாவட்ட விடுதலைப் புலிகளின் இராணுவ தளபதியும் ஆவார். (இ 76)

## இரவு வேளையில் ஹெலி சூடு

நவாலி, நவ. 27

நவாலியில் இரவு வேளையில் ஹெலி சூட்டில் பல வீட்டுக் கூரைகள் சேதமடைந்தன. ஓட்டோ ஒன்றும் சேதத்துக்குள்ளானது.

24 ஆம் திகதி இரவு 9.30 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது. ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து சுமார் அரை மணிநேரம் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது. (இ-100)

## ஆசிரியர் சம்பளப் பணம் கொண்டு வந்து தர உறுதி

யாழ் கல்வி அலுவலக ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் மாதச் சம்பளத்தை பணமாக கொழும்பிலிருந்து எடுத்துவர செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முழு ஒத்துழைப்பு வழங்கும்.

தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ் கிளை அலுவலகப் பொறுப்பாளர் செல்வி அன்ரொனிற்றா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் இத்தகவலை வெளியிட்டார்.

கொழும்பில் கல்வித் திணைக்களத்தில் இருந்து பணத்தை அதிகாரிகள் பெற்றுத் தந்தால், நாம் அதனை இங்கு கொண்டு வந்து தருவோம் என்று செல்வி அன்ரொனிற்றா தெரிவித்தார். (உ 3)

## இடம்பெயர்ந்தோருக்காக புதிய சிகிச்சை நிலையங்கள்

அனலைதீவு, நவ. 27

ஊர்காவற்றுறை 'கரம்பொன்' பருத்தியடைப்பு மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நன்மைக்காக புதிய சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாதாந்தம் முதல் செவ்வாய்க்கிழமைகளில் சுருவில் அன்னைமேரி மாதா கோவிலில் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து கொடுபடும்.

இதேபோல் சின்னமடு மாதா கோவிலில் அகதிகளாகத் தங்கியுள்ள குழந்தைகளுக்கு மாதாந்தம் மூன்றாவது செவ்வாய்க்கிழமை தடுப்பு மருந்து கொடுபடும்.

தீவுப்பகுதியிலுள்ள அவ்வப் பகுதி சிகிச்சை நிலையங்களில் வழமைபோல் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுபடும் என்பதை ஊர்காவற்றுறை பதில் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ-18)


## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுப் பெரியார் அமரர் உயர்திரு
சண்முகம் ஞானப்பிரகாசம்

கூட்டுறவுத்துறையின் வழிகாட்டியாய் ஒளிவிளக்காய் சிந்தனைச் சிற்பியாய் செயல்பட்ட சிங்கம். சேமிப்பு ஏழைமக்களின் முன்னேற்றத்திற்கு கடன் வழங்கல் ஆகியவற்றிற்காக அயராது உழைத்த கூட்டுறவுத் தந்தையைத் திடீரென இழந்து கூட்டுறவு உலகம் தவிக்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களை சகலருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென். மைக்கல் சிக்கனக்
கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்
உரும்பராய்.

(14958)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி சிவகுலராணி பசுபதி
(சிவா)

அன்னை மடியில்: 14 - 02 - 1969
ஆண்டவன் அடியில்: 27 - 11 - 1989

திதி: 15 - 12 - 1990

திருவையாற்றிலே எமைப் பிரிந்து சென்றவளே
உனை சுமந்த என் வயிறு பற்றி எரியுதம்மா
சிவகுலராணியெனச் சிரித்து மகிழ்ந்திட்டாய்
அவலத்தில் எமை அழவைத்து சிவனடி சேர்ந்தாயே!

என்றும் உன் நினைவோடு உயிர் வாழும்:
அப்பா, அம்மா, அண்ணா,
தங்கை, தம்பிமார்

சதிரவேற்பிள்ளை வீதி,
புலோலி மேற்கு,
தம்பசிட்டி, பருத்தித்துறை (14812)


ஊர்காவற்றுறை

## பிரதேச சபை - கேள்வி அறிவித்தல் - 1991

கீழே குறிப்பிடப்படும் சந்தைகள்/ இறைச்சிக் கடைகள் ஆகியவற்றிற்கு 1-1-1991 தொடக்கம் 31-12-1991 வரை குத்தகைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 11-12-1990 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை அதற்கான கட்டணங்களைச் செலுத்தி 7-12-90 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஊர்காவற்றுறை உப அலுவலகம், நாரந்தனை உப அலுவலகம் ஆகிய இரண்டிற்கும் நாரந்தனை உப அலுவலகத்திலும் காரைநகர் வடக்கு உப அலுவலகத்திற்குரிய சந்தைக் குத்தகைக் கேள்விப் பத்திரக் கட்டணத்தை காரைநகர் வடக்கு உப அலுவலகத்திலும் காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதி விசேட ஆணையாளர், ஊர்காவற் பிரதேசசபைக்கும் இணைப்பிரதி யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ள கூடியகுறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. ஊர்காவற்றுறை | 1. மாட்டிறைச்சிக்கடை I | 25 000/- | 500/- | 100/- |
| | 2 மாட்டிறைச்சிக்கடை II | 25,000/- | 500/- | 100/- |
| | 3. மீன் சந்தை | 75 000/- | 500/- | 100/- |
| | 4 மரக்கறிச் சந்தை | 65,000/- | 500/- | 100/- |
| | 5. வாகன தரிப்பிட வரி அறவிடல் | 20 000/- | 100/- | 50/- |
| | 6 ஒற்றை மாட்டு வண்டிலுக்கு பாடு வழங்குதல் | — | 100/- | 50/- |
| 2. நாரந்தனை | 1. புளியங்கூடல் சந்தை (மீன் மரக்கறி உட்பட) | 30,000/- | 250/- | 50/- |
| | 2. மாட்டு இறைச்சிக்கடை புளியங்கூடல் | 10,000/- | 250/- | 50/- |
| | 3 மாட்டு இறைச்சிக்கடை நாரந்தனை | 10,000/- | 250/- | 50/ |
| 1: காரைநகர் வடக்கு | 1. நாவலடிக் கேணி மீன் சந்தை | 5,000/- | 250/- | 50/- |

குறிப்பு:- நாரந்தனை, புளியங்கூடல் மாட்டிறைச்சிக்கடைகளுக்கு தாமே வியாபார தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

சி. இரகுலேந்திரன்,

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
ஊர்காவற்றுறை.
23-11-1990.

(சி/5459)


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இறுதி வரை தன்னலமற்ற சேவையாற்றி அமரத்துவம் அடைந்த முன்னாள் கிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு சுன்னாகம் பலநோ. கூட்டுறவுச் சங்கம் தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி, அவரது குடும்பத்திற்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.

(சி-5461)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மண் மீட்கப் புறப்பட்ட படைக்கு மக்கள் ஒத்துழைப்பின் எழுச்சிவிழா!

## உதயன்

### எழுச்சியின் பிரதிபலிப்பு

மாவீரர்களின் இலட்சியத்தை ஈட்டுவதற்கு, ஒம்மால் எந்த விதத்தில் உதவ முடியும் என்று ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் உன்னுதல் வேண்டும். அதற்காக உழைப்பதே மாவீரர் நினைவைக் கொண்டாடுவதன் பெரிய அனுவடையாக அமைய வேண்டும், — இவ்வாறு மாவீரர் வாரத்தின் முதல் நாளன்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த ஆறு நாட்களாக ஈழத் தமிழ்ப் பிரதேசம் எங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒரு தேசியப் பெருவிழா என்று கருதுமளவுக்கு முழு நிறைவுடன் அது கொண்டாடப்பட்டது. மக்கள் இதயங்களில் கனன்று கொண்டிருக்கும் சுதந்திர வேட்கையைப் பிரதிபலிக்கும் ஓர் எழுச்சி விழாவாக அமைந்தது என்பதே பொருத்தம்.

இவ்வகை எழுச்சி, சுதந்திர இலட்சியத்தினை எய்த வேண்டும் என்ற உறுதியை தமிழர் நெஞ்சங்களில் மேலும் படர வைத்திருக்கிறது எனச் சொல்லலாம். சுதந்திரப் போராட்டத்தில் இதுவரை பங்களிப்பு நல்காதவர்களுக்கும், தாங்கள் தவறிழைத்து விட்டனர் என்ற குற்ற உணர்வு ஏற்படும் அளவுக்கு மக்களின் எழுச்சி கடந்த ஒரு வாரமாகப் பொங்கிப் பிரவாகித்தது.

இத்தனை மாவீரர்களின் உயிர்த் தியாகங்களின் பின்னரும், இத்தனை தமிழ் மக்களின் இழப்புக்களின் பின்னரும், தன்னாட்சிக்குக் குறைந்த எதனையும் ஏற்கத் தயாரில்லை என்பதைக் கொழும்பு அரசுக்கு மாவீரர் வாரம் புகட்டியிருக்கிறது. இதனை அரசு கருத்தில் கொள்வது அவசியம்.

இராணுவத் தாக்குதல்களை நடத்தித் தமிழர்களின் சுதந்திர தாகத்தை அடக்கி விடலாம் என்ற தப்பெண்ணத்தை இன்றிலிருந்தாவது கொழும்பு அரசு களைந்து விடவேண்டும். இராணுவ பலம் அதிகம் என்ற நிலைப்பாட்டை எய்தி, அந்த நிலையில் வைத்து அரசியல் தீர்வு என்று வந்து தமிழர்கள் விரும்புவதை — கேட்பதைக் கொடுக்காமல், தாம் விரும்பியதைக் கொடுத்து ஏமாற்றலாம் என்ற எண்ணத்தையும் அது இனித் தூக்கி வீசிட வேண்டும்.

வாழ்வெனில் சுதந்திர வாழ்வு, இல்லையேல் சாவு என்ற நிலைக்குத் தமிழர்கள் வந்துவிட்டதை அரசு இதுவரை உணர்ந்திருக்க வேண்டும். அப்படி உணரவில்லை என்றால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

ஒற்றையாட்சி தான் தேசிய ஒருமைப்பாடு என்ற வரட்டுக் கொள்கையைக் கைவிட்டு, சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழர்களுக்குத் தன்னாட்சி உரிமையையாவது வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைப் பற்றிக் கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தையும் அது நழுவவிட்டால் அதன் விளைவுகள் என்னாகும் என்பதற்குக் காலமே பதில் சொல்லும்!

## மாவீரர் வார நிறைவு நாள் இன்று

இந் நாள் தமிழீழ மக்கள் தனித்துவமான முத்திரை பதித்துக் கொண்டாடும் திருநாள். மண்ணின் மீட்சிக்காய் தம் நல்லுயிர் ஈந்தும், களத்தில் நின்று வீரமற தெய்வங்களாய் போராடியும் எங்கள் கண்ணியத்தையும் திண்ணிய எண்ணங்களையும் எண்ணிப் படி காத்த மாவீரரின் பொன்னான எங்கள் உள்ளங்களைக் கவர்ந்து எழுந்துவருகின்ற, ஏதோ ஒரு உள்ளக் கிடக்கை மகிழ்ச்சி பெற்றுப் புத்தெழில் பொங்க நாமெல்லாம் புளகாங்கிதத்தோடு பூரிப்படைந்து விழா எடுக்கும் பெருநாள்.

துன்பம் மிகுந்து, உடைமைகளையும், உயிரினையும் மக்கள் இழந்தனரெனினும், இன்று ஓர் இன்பம் ஊற்றெடுக்கிறது. மாடமாளிகைகள் கோலமிழந்திருக்க, கல்விச்சாலைகளும் தெய்வசந்நிதிகளும் சோலை இழந்திருக்க, வீதிகள் எல்லாம் பாழ்பட்டிருக்க, அவற்றின் ஊடே விழிப்பும், எழுச்சியும், உத்வேகமும் கரைபுரண்டோடுகின்றது. 'உடைமையை இழந்தோம். உரிமையை இழந்தோம். உணர்வை இழக்கலாமோ' என்ற ஒருமைப்பாடு சந்து பொந்துகளெல்லாம் முந்தி முந்தி ஓடுகின்றது.

நிறை வாழ்வை, உரிமை உள்ள வாழ்வை, அறிந்திராத நம்மக்கள் இன்று போல என்றும் இரா தா! இந்நாளை அடுத்துச் சுதந்திரத் திருநாடு மலராதா! என்று அந்த நாளை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். இப்படி எல்லாம் இருந்து விட்டால், நம் வாழ்வு சிறந்திடும், பயன் மிகுந்திடும். நாடு பொலிவுபெறும் வையகம் தமிழ் ஈழத்தைக் கண்டு பெருமைப்படும் என்று எண்ணி நாம் பேரானந்தம் அடைகின்றோம். இந்தக் காலகட்டத்தில் உயிரோடு இருப்பதே பெறற்கரிய பேறென்று இளைஞர்கள் எண்ணுகின்றனர். வாழக் கிடைத்ததே மகிழ்ச்சி என்று முதியோர் எண்ணுகின்றனர்.

இந்த யுகத்தினிலே இந்த ஈழமண்ணிலே அவதரித்த ஒரு தளபதியும் அவன் ஆணைப்படி நடந்து மண் மீட்கப் புறப்பட்ட ஒரு வேங்கைப் படையும், சிப்பாய்களை அழித்து தமிழினத்தை அடிமைப்படுத்த முயற்சித்த எதிரிப் படையும் போரிட்ட போது தமிழ் மக்கள் தமது பேராதரவால், தந்தோம் தந்தோம் என்று இரவும் பகலும் ஆற்றிய தனித்துவமான ஒத்துழைப்பும் இன்று எழுச்சி பெற்று விழிப்படைந்திருக்கிறது. இது ஓர் அறுவடை விழாவல்ல ஆனால் ஓர் எழுச்சி விழா. கண்ணீராலும் செந்நீராலும் வளர்ந்த பயிரை வேலி போட்டுக் காப்பாற்றும் விழா. களை பிடுங்கி அழிவைத் தடுக்கும் விழா. உரமிட்டு வீரம் சேர்க்கும் விழா.

பண்டைத் தமிழரின் மறவாழ்வு இறவாத புகழுடையது - அது என்றும் இன்றும் நின்று நிலைக்கும் என்று வெளிக்கொணரும் விழா.

இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தை எண்ணாமலிருக்க முடியாது. எண்ணங்கள் பல பல பொங்கி வருகின்றன. இந்நாளின் தனிச்சிறப்பு அந்த எண்ணங்களை எண்ணி எண்ணித் திண்ணியராகுவோம்! ★

- சண்முகன் -

## இவர்களே மாவீரர்கள்!

களம்பல கண்டவர் — எம்
உள்ளத்தில் நிலைகொண்டவர்
இனத்தின் விடுதலைக்காகவே — தம்
உறவைத் துறந்து சென்றவர்

கண்ணிமைக்க மறந்தனர் — கூட
விலங்கை அறுக்க விரைந்தனர்
மண்ணின் மீட்புக்காகவே — இவர்
விண்ணுலகம் ஏகினர்

மாண்டவர் இடத்துக்குப் புதியவர்— அநீதியின்
தாண்டவத்தை அடக்கி ஆண்டனர்
வாஞ்சையுடன் இலட்சியம் ஏந்தினர்
இவர்களே மாவீரர்கள்

—வே. மல்லிகா

## வரலாறு உன்னை வாங்கிக்கொண்டது!

மாவீரனே...!
எங்கள் ஊருக்கு
நீ இன்னும்
இளைஞன் தான்
தேசத்துக்கோ
மாவீரன்...

பூவாய் இருந்த
உன்னைப்
புலியாய் மாற்றியது
காலம்...

கனவுகளைக்
கையில் ஏந்தும்
பருவத்தில்
நீ
துப்பாக்கியைத்
தூக்கிக்கொண்டாய்...

அன்று நீ
கண்ட கனவை
இன்று நாங்கள்
கண்டு
கொண்டிருக்கிறோம்!

நீ படிப்பைத்
துறந்து போனவன்
தான்......
ஆனாலும்
உலகம் உன்னிடம்
புதிய பாடத்தைப்
படித்தது!

நீ உனது
சின்ன வாழ்வையே
வரலாறாக்கினாய்...
அதனால்தான்...
வரலாறு உன்னை
வாங்கிக்கொண்டது!

பிஞ்சு வயதில்
நஞ்சைச் சுமந்து
திரிந்தவனே!
நாளை
எங்கள் தேசத்துப்
பாலர்கள் தங்கள்
புத்தகப் பைகளிலே
உன்னையும்
உனது பாடத்தையும்
சுமப்பார்கள்...

— நல்லூர் தாஸ் -

## மண்டைதீவில் நிவாரண உதவி

மண்டைதீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மண்டைதீவு கிழக்கு கிராமசேவையாளர் திரு. எஸ். சுந்தரராஜா நிவாரண உதவிகளை வழங்கிவருகிறார்.

மண்கும்பான், அல்லைப்பிட்டி, சாட்டி ஆகிய பகுதிகளில் கிராம சேவையாளர் இல்லாததாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-ச)

## காணாமற் போனோர் விவரம்

கடந்த ஏழு ஆண்டுகளில் நாட்டில் காணாமற்போனோரின் விவரங்களை இலங்கை சட்டவறிஞர் மனித உரிமைக் குழு திரட்டி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1-1-1983 முதல் நாட்டில் காணாமற்போனோர் பற்றிய விவரங்களை, அவர்களது உறவினர்கள் சத்தியக் கடதாசி மூலம் இம் மனித உரிமைகள் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-ச)

## இனிய வாழ்த்துக்கள் உதயா!

ஆண்டுகள் ஐந்தில் நிறைவினைக் கண்டு
ஆறாம் ஆண்டினில் காலடி வைத்து
கண்டும் புகழுடன் இலங்கும் உதயா!
இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் உனக்கு!
மாண்புறும் பணியினை நன்றே செய்து
மக்கள் மனங்களில் பொலிந்திடும் உதயா!
அன்பலை யாவும் கவினுற காட்சியாய்க்
குவலயம் உயர்ந்திட நீடுநீ வாழ்க!

நடந்துநீ வந்ததாம் பாதையில் எத்தனை
நலிவுகள் விபத்துகள் கண்டாய் எனினும்
முடங்கியே விடாமல் துயருறும் எங்கள்
மக்களின் தொண்டினைத் துணிவுடன் உறுதியாய்
தொடர்ந்தே ஆற்றிடும் உதயனே வாழ்க!
தமிழர் வாழ்வின் துறைகளில் எல்லாம்
படர்ந்துநீ எங்கும் பசுமையாய் வாழ்க
பாரினில் அவர்தம் பெருமையை வளர்த்தே!

எம்மவர் வாழ்வினில் இனிதாய் இணைந்தனை
இவ்வுலகு எங்ஙணும் நிகழும் நிகழ்வுகள்
செய்திகளாய்த் தந்துநீ தர்மமே காத்திட
சிறப்புடன் நடுவு நிலைமையில் திகழ்ந்திட
நம்பிடும் ஒளியினில் "உதயன்" என்றமைந்திட
நாளும் வெளிவரும் நல்லிதழ் என்றிட
எம்மனம் இறைவனை எண்ணியே வணங்கிட
என்றுமே இனிய வாழ்த்துக்கள் உதயா!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## கர்ப்பிணி சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம், நவ. 27

கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் கர்ப்பிணி பரிசோதனைச் சிகிச்சைகள் தற்பொழுது வாரத்தில் ஐந்து கிழமைநாட்களிலும் நடைபெறுகின்றன.

இந்த வசதி பொதுமக்களின் நன்மை கருதி டிசம்பர் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

1991 ஜனவரி முதல் கர்ப்பிணி பரிசோதனைச் சிகிச்சை வெளிநோயாளர் பிரிவில் வாரத்தில் திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் மட்டுமே காலை 8 மணி முதல் 12 மணிவரை நடைபெறும்.

கர்ப்பிணிகள் பிரசவத்துக்காக மகப்பேற்று விடுதியில் எந்த நாட்களிலும் அனுமதிக்கப்படுவார்கள்.

பதில் வைத்திய பொறுப்பதிகாரி திரு செ. பரமசிவம்பிள்ளை மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சி அலை

# மாவீரர் வாரத்தில் பொங்கிப் பிரவாகம்!

## நகரங்கள், கிராமங்கள் எங்கும் எழிற்கோலம்!!

தமிழீழ மக்கள் மாவீரர் நாளை பெரும் உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். தமிழீழத்தின் விடிவிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த போராளிகளை நினைவு கூருவதற்கும் அவர்களைக் கௌரவிப்பதற்காகவுமே மாவீரர் நாள் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

தமிழீழம் எங்கும் கடந்த 21 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. கடந்த ஆறு தினங்களாக இதற்கான நிகழ்ச்சிகள் நகரங்கள், கிராமங்கள் தோறும் புதிய உத்வேகத்துடன் இடம்பெற்று வருகின்றன. இன்று 27 ஆம் திகதி மாவீரர் நாளின் இறுதித்தினமாகும்.

ஒவ்வொருவருடமும் நவம்பர் மாதத்தின் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை- ஏழு நாட்களும் மாவீரர் வாரமாக கொண்டாடப்பட இருக்கிறது.

இம்முறை மாவீரர் வாரத்தில் தமிழீழ மக்கள் மத்தியில் விடுதலை உணர்வு மேலோங்கி நிற்கிறது. நாம் இன்னொரு இனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளோம் என்பதை இந்த நாட்கள் இடித்துக் கூறுகின்றன.

மாவீரர் வாரம் வடபுலத்தில் கோலாகலமாக- எழுச்சிமிகு கொண்டாட்டமாக நடைபெற்று வருகின்றது. நகரங்கள், கிராமங்கள் தோறும் உள்ள வீதிகள் ஒழுங்கைகள் எல்லாம் புதிய மெருகு பெற்றுள்ளன, எழில் கட்டியுள்ளன. எழிலும் வனப்பும் மிகுந்து காணப்படுகின்றன.

வீதிகள் தோறும் சோடனைகளும், அலங்கார வளைவுகளும், பந்தல்களும், பதாகைகளும் காணப்படுகின்றன. இந்தக் காட்சிகளைக்காணும் போது விடுதலையை நெருங்கி விட்டோம் என்ற ஓர் உணர்வு எம்மை அறியாமலேயே உருவாகிறது. அதனால் மனம் ஒருவித நிறைவை அடைகிறது; ஆறுதலடைகிறது.

### கலை எழுச்சி

அலங்கார வளைவுகளை மக்கள் தாமே முன்வந்து போட்டிபோட்டுக் கொண்டு அமைத்துள்ளனர். அலங்கார வளைவுகளில் கலைத்துவம் மிளிர்கிறது. பெரும்பாலான வளைவுகள் உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு கண்ணைமுறு நிறங்களில் கண்ணைக் கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

பந்தல்கள், வளைவுகள், சோடனைகள் பலவற்றிலும் திராவிட ஓவிய- சிற்பக் கலைமரபுகளும், கலை நுணுக்கங்களும் கண்ணைப் பறிக்கின்றன. விடுதலை எழுச்சியுடன் கலை எழுச்சியும் கலந்து பரிணமிப்பதையே இவை புகட்டுகின்றன.

அலங்கார வளைவுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மற்றும் ஸ்ரீலங்கா இராணுவம்,

**- துருவுநன் -**

விமானப்படை, கடற்படை நடத்திய படுகொலைகள், கட்டுழிவுகள், அடாவடித்தனங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் ஓவியங்கள் உயிரோட்டமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

### உறுதியின் உறைவிடம்

தோளில் துப்பாக்கி ஏந்திய போராளி ஒருவர் எதிர்காலத்தின் சந்ததிகளான இரண்டு சிறுவர்களை வீரமரணமடைந்த போராளிகளின் சமாதி நோக்கி அழைத்துச் செல்வதை சித்தரிக்கும் சித்திரங்கள் (உறுதியின் உறைவிடம்) சிகரங்களிலும் பந்தல்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலான இடங்களில், பந்தல்களில் வீரமரணமடைந்த போராளிகளின் நிழற்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. பல இடங்களில் ஒலிபெருக்கிகளில் எழுச்சிப் பாடல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

இவற்றைவிட கண்காட்சி, இரத்ததானம், சிரமதானம் என்று பல்வேறு பொதுநல நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அநேக கிராமப் புறங்களில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இவை போன்ற விழாக்கள் தமிழர் வாழ்வில் இன்று, நேற்று ஏற்பட்டவை அல்ல. சரித்திர காலம் தொட்டே இப்படியான விழாக்கள், வைபவங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

### வெற்றி விழா

அக்காலத் தமிழ் மன்னர்கள் எதிரி நாடுகளுடன் போரிட்டு, வெற்றிவாகை சூடிய பின்னர், வெற்றிக் களிப்பை பெருவிழாவாகக் கொண்டாடியுள்ளனர். களத்தில் வீரமரணமடைந்த தமது வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், வெற்றியை மக்கள் குதூகலத்துடன் கொண்டாடும் வகையிலுமே அக்காலத்தில் பெரும் பொருட் செலவில் வெற்றி விழாக்களும், வீரவிழாக்களும் கொண்டாடப்பட்டன. சங்க கால இலக்கியங்களில் இவை வீர காவியங்களாக எழுதப்பட்டுள்ளன.

### பளிச்சிடும் விடுதலை உணர்வு

அப்படியொரு விழாவாகவே, அண்மைக் காலச் சரித்திரத்தில் ஓர் எழுச்சிக் காவியமாக தமிழீழ மக்களும் இந்த மாவீரர் விழாவை பெரும் விழாவாக- வெற்றி விழாவாகக் கொண்டாடுகின்றனர்; தமது சுதந்திர வேட்கையை பெருவிழாவாகப் பிரதிபலித்துள்ளனர்; தாம் பட்ட கஷ்டங்கள், படும் கஷ்டங்கள் நெருக்கடிகளை மறந்து மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்; அது தமது முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதிச்செய்கின்றனர்.

தமிழீழ மக்களின் விடுதலை உணர்வு மாவீரர் நிகழ்ச்சிகளில் பட்டெனப் பளிச்சிடுகிறது: விடுதலைப் பாதையில் வீறுநடைபோடுவது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

தமிழீழத்துக்காக - தமிழீழ மக்களுக்காக - தமிழ் மண்ணின் விடிவுக்காக - தமது இன்னுயிரை ஈந்த வீர மறவர்களுக்கு இந்த நாளில் ஒவ்வொரு தமிழனும் அஞ்சலி செலுத்துவது "தமிழர் நாம் சுதந்திரத்தை எவ்விலை கொடுத்தும் பெற்றே தீருவோம்" என்ற அவர்களின் திடசங்கற்பத்துக்கு ஓர் ஒளிக்கீற்றாகும்; உலகுக்கு அதனைப் பறைசாற்றும் நிகழ்வாகும். ஒட்டு மொத்தத்தில் மாவீரர் வாரத்தில் தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சி பொங்கிப் பிரவாகிக்கிறது.

"செங்குருதி சிந்தி விட்ட மாவீரர் நினைவுகள் என்றும் இம் மண்ணில் நிலைக்கட்டும்!"

★

## யாழ்.நகர மேற்குப் பிரிவு மக்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 27

இதுவரை புதிய அட்டையைப் பெறாத யாழ் நகர மேற்குப் பிரிவு மக்கள், அரியாலை திருமகள் வீதியில் உள்ள தமது இருப்பிடத்துக்கு வந்து பதிந்து கொள்ளுமாறு கிராம சேவையாளர் திரு. ஐயாத்துரை கோரியுள்ளார்.

ஏற்கனவே உள்ள பங்கீட்டு அட்டையுடனும் அடையாள அட்டையுடனும் சமுகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

# 1991ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் மானிப்பாய் பட்டினம் / மானிப்பாய் கிராமம் / பண்டத்தரிப்பு பட்டினம் / பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க்குறிக்கப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 12 - 12 - 1990 ஆம் திகதி நண்பகல் 12, 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும். கேள்விப் பத்திரப் பணத்தையும் 29 - 11 - 1990 ஆம் திகதியிலிருந்து 11 - 12 - 1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி சம்பந்தமான தேவையான விபரங்களையும் நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,,
வலி. தென்மேற்கு பிரதேசசபை.

க. இராஜசுந்தரம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
நாரமண்டபம், மானிப்பாய்.
25. 11. 1990

| உப அலுவலகம் | | குத்தகையின் தன்மை | நிர்ணயிக்கப் பட்ட மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்; | | | | | | |
| | இல. 1. | ஆட்டிறைச்சிக்கடை இல. 1 (சந்தை) | 190/- | 300/- | 50/- | 25,200/- |
| | 2. | ஆட்டிறைச்சிக்கடை இல. 2. (சந்தை) | 190/- | 300/- | 50/- | 29,615/- |
| | 3. | கட்டுடைச் சந்தை | — | 300/- | 50/- | 1,000/- |
| | 4. | மானிப்பாய் பொதுச் சந்தை | — | 500/- | 50/- | 91,200/- |
| பண்டத்தரிப்பு பட்டினம்: | | | | | | |
| | 1. | ஆட்டிறைச்சிக்கடை | 50/- | 300/- | 50/- | 2,500/- |
| | 2. | மாட்டிறைச்சிக் கடை | 50/- | 500/- | 50/- | 95,750/- |
| | 3. | குப்பை வண்டிலுக்கு மாடு வழங்குவதற்கு | — | 25/- | 25/- | 475/- |
| | 4. | பண்டத்தரிப்பு பொது சந்தை | — | 500/- | 50/- | 2,75000/- |
| பண்டத்தரிப்பு கிராமம்: | | | | | | |
| | 1. | மாதகல் சந்தை | — | 200/- | 50/- | 20,000/- |
| | 2. | விளான் " | — | 200/- | 50/- | 5000/- |
| | 3. | இளவாலைச் சந்தை | — | 200/- | 50/- | 8000/- |
| | 4. | மாசியப்பிட்டிச் சந்தை | — | 200/- | 50/- | 9000/- |
| | 5. | மாட்டிறைச்சிக்கடை (மாதகல்) | 50/- | 300/- | 50/- | 3500/- |
| | 6. | மாட்டிறைச்சிக் கடை (இளவாலை) | 50/- | 300/- | 50/- | 48000/- |
| | 7. | மாட்டிறைச்சிக் கடை (மாசியப்பிட்டி) | 50/- | 300/- | 50/- | 8000/- |
| | 8. | அலுவலக வளவு குத்தகை | — | 100/- | 50/- | 700/- |
| | 9. | எருக்கூளாலை வளவு குத்தகை | — | 25/- | 50/- | 300/- |
| மானிப்பாய் கிராமம்: | | | | | | |
| | 1. | சாவல் கட்டு சந்தை ஆனைக்கோட்டை | — | 300/- | 50/- | 5001/- |
| | 2. | பிரசாத் சந்தை நவாலி | — | 300/- | 50/- | 20,000/ |
| | 3. | சாக்கைதீவுச் சந்தை ஆனைக்கோட்டை | — | 300/- | 50/- | 3500/- |
| | 4. | மாட்டிறைச்சிக்கடை (பிரசாத்சந்தை) | — | 500/- | 50/- | 6000/- |
| | 5. | ஆட்டிறைச்சிக் கடை சாவல்கட்டு | — | 300/- | 50/- | 4500/- |

[சி-5458]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27/11/1990 பக்கம் -05

# காரைதீவில் ஆண்களுக்கு விசேட அடையாள அட்டை!

## பெறாதவர்கள் பூஸாவுக்காம்

மட்டக்களப்பு, நவ. 27

மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவுப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் படையினர் வழங்கும் விசேட அடையாள அட்டையைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்

இந்த அறிவிப்பை காரைதீவு முகாம் அதிரடிப்படையினர் ஒலிபெருக்கி மூலம் விடுத்தனர்

15 வயது முதல் 35 வயது வரையிலான சகல ஆண்களும் உடனடியாக இந்த விசேட அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றால் இந்த விசேட அடையாள அட்டையைக் காட்ட வேண்டும். இந்த அடையாள அட்டையைப் பெறாதவர்கள் கைது செய்யப்பட்டு, பூஸாவுக்கு அனுப்பப்படுவர் என்று பொறுப்பதிகாரி எச்சரித்துள்ளார் (ஒ)

# இலவச உணவில் விலைமாற்றம்

போக்குவரத்துச் செலவு அதிகரிப்பைக் காரணம் காட்டி முல்லைத்தீவில் வழங்கப்பட்டு வரும் இலவச உணவில் விலைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது

மா ஒரு கிலோ 16 ரூபாவாகவும். அரிசி 17 ரூபாவாகவும் விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (இ 94]

# விளையாட்டுத் துறையும் ஜீ.சி.ஈ. மாணவர்களுக்கு ஒரு பாடம்

கொழும்பு, நவ. 27

1993 ஆம் ஆண்டில் இருந்து ஜீ. சி ஈ சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில விளையாட்டுத்துறையும் ஒரு பாடமாக இடம்பெறவிருக்கிறது

இதன் காரணமாக அடுத்த ஆண்டில் இருந்து உடற் பயிற்சிக் கல்வியும் ஒருபாடமாக போதிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-எ]


## மாவீரர் விழா

கோட்டையில் எழுந்தது எங்கள் கொடி
அது வீர வேங்கைகளின் புலிக்கொடி
மாவீரர் என்ற போர்வீரர்
பல சாதனை படைத்த தமிழ்வீரர்
உலகெங்கும் ஒலிக்குது உங்கள் குரல்
ஊர் எங்கும் கேட்குது உங்கள் குரல்
அன்னிய படையை விரட்டி அடி
அவன் ஆதிக்கம் ஒழிய விரட்டி அடி
வடகிழக்கு என்ற நம்தேசம்
அதுநாளை வந்திடும் நம் கையில்
எங்களுக்கு என்று ஒருநாடு
வேண்டும் என்று போராடு

சோபனா ரெக்ஸ்லைல்ஸ்

16, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(14959]

## மாவீரர் தின வாழ்த்துக்கள்!

இதோ உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது
சுண்டுக்குளி பழைய பூங்கா வீதிச் சந்தியில்

ஜெ. சித்தாரா, 3A, கொழும்புத்துறை வீதி,
பல்பொருள் அங்காடி சுண்டுக்குளி

J. SITHARA 3A, Colombagam Road,
SUPER MARKET Chundikuli.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக இன்று 27 – 11 – 90 நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படும். மனைத் தேவைகளை நிறைவு செய்ய ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

ஜெ. சித்தாரா,
இல. 3 A, கொழும்புத்துறை வீதி.
சுண்டுக்குளி.

(சி-5456)


## மரண அறிவித்தல்

### கந்தசாமி சிதம்பரப்பிள்ளை

(உப அதிபர், வட்டு. இந்துக் கல்லூரி)

காலஞ்சென்றவர்களான திரு. கந்தசாமி, திருமதி பாறுபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வனும், திருமதி நித்தியவதனியின் அன்புக் கணவரும், சேந்தன், அம்பிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுந்தரம், காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமான கந்தசாமி சிதம்பரப்பிள்ளை (உப அதிபர், வட்டு. இந்துக் கல்லூரி) நேற்று 26 ஆம் திகதி காலமானார்.

இறுதிச்சடங்கு இன்று 27 ஆம் திகதி காலை வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

(14666) திருமதி நி. சிதம்பரப்பிள்ளை

# மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி விழாக் கோலம்

கிளிநொச்சி நவ. 27

கிளிநொச்சி மாவட்டம் முன் எப்போதும் இல்லாத வகையில் மாவீரர் தினத்தை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

நகரம், கிராமம் என்று வேறுபாடு இல்லாமல் எல்லா இடங்களிலும் பந்தல்கள், அலங்கார வளைவுகள், அமைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் யாவும் மஞ்சள், சிவப்பு வண்ண கடதாசிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன

தினமும் பல இடங்களிலும் மாவீரர் தின கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ள வேளையிலும் மாவீரர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. அங்கே மாவீரர் தின கலை நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

வீதிகள் பலவற்றுக்கு போராளிகளின் பெயர்கள் சூட்டப்படுகின்றன

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 168 பேராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - 76)

## குடாநாட்டில் மாவீரர் தின நிகழ்ச்சிகள்

### வீதிகளுக்கு போராளிகள் பெயர்

குடாநகர் நவ 27

கொக்குவில் மத்தி சிற்றாளவயினர் மாவீரர்களின் பெயர்களை வீதிகளுக்குச் சூட்டியுள்ளனர்.

விவரம் வருமாறு!

லெ. கேணல் பாண்டியன் (ஸ்ரீகரன் செல்லத்துரை, வீதி- பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு

லெ. கேணல் இம்ரான் (சதானந்தன் சந்திரப்பிள்ளை) வீதி- பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை கொக்குவில்.

கப்டன் ரகிராஜ் கிரிதரன் சௌந்தரலிங்கம்) வீதி அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவில் கிழக்கு.

வீர வேங்கை புறூஸ்லி (சந்திரகுமார் குமாரசாமி) வீதி- குளக்கரை ஒழுங்கை, கே.வில் வீதி, கொக்குவில் கிழக்கு.

வசந்தன் (வசந்தகுமார் சிவகுருநாதன்) வீதி- மில் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு-

(இ-51)

### தெரு மூடிக் கொட்டகைகள்.

தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான தெருமூடிக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தினர் 300 அடி நீளமான தகரப் பந்தல் ஒன்றை அமைத்து நூற்றுக்கும் அதிகமான மாவீரர்களின் புகைப்படங்களை வைத்துள்ளனர்.

(இ-117)

### முடியாத காவியம் முதலிடம்

வடமராட்சி ப. நோ. கூ சங்கங்களின் கோட்டத்தில் நடத்தப்பட்ட மாவீரர் தின நாடகப் போட்டிகளில் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தினரால் மேடையேற்றப்பட்ட ''முடியாத காவியம்'' என்ற நாடகம் முதலிடத்தை பெற்றது

கடந்த 17 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன. (இ-90)

### மரம் நடுகை

தென்மராட்சி, நவ 27

மாவீரர் தினத்தையொட்டி பளை மகா வித்தியாலய மாணவ மாணவிகள் வித்தியாலய வளவில் மரம் நடும் பணியில் ஈடுபட்டனர், (இ-117)

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலிழந்துவிட்டது என்கிறார் சிறிமாவோ

யாழ்ப்பாணம், நவ. 27

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் இப்பொழுது செயலிழந்து விட்டது

தம்மைச் சந்தித்த கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னணியிடம் மேற்கண்டவாறு கூறினார் சுதந்திரக்கட்சித் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள இனப்பிரச்சினைக்கு ஐ.தே.க. அரசு இன்னமும் திட்டவட்டமான ஒரு தீர்வை முன்வைக்காத நிலையில் எமது கட்சி அதுபற்றிய நிலைப்பாட்டினை வெளியிடுவது சிரமமானதாகும்

இன பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாம் ஆதரிக்கவில்லை. அரசியல் தீர்வே இதற்குச் சிறந்தது

வடக்கிலிருந்து கிழக்குப் பிரிக்கப்படுவது கிழக்கிலங்கை மக்களினால் தீர்மானிக்கப்படவேண்டியது இதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை எமது கட்சி எதிர்க்கிறது.

இப்படி அவர் கூறினார். (இ-5)

## 'கன்ரீன்' வசதி இன்றி நோயாளர்கள் கஷ்டம்

யாழ் போதனா வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளர்கள் 'கன்ரீன்' வசதியின்றி (சிற்றுண்டிச்சாலை) கஷ்டப்படுகின்றனர் என்று புகார் கூறப்படுகிறது.

யாழ்-போதனா வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கிய நாளிலிருந்து வைத்தியசாலை வளவில் முன்னர் இயங்கிய கன்ரீனை மீண்டும் இயக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது

இந்தக் கன்ரீன் இயங்காததால், நோயாளர்கள் வெளியில் சென்று தமக்கு தேவையானவற்றை வாங்கவேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது (இ-3-15)

## நெடுந்தீவுப் படகுச்சேவை

நெடுந்தீவுக்கான படகுச் சேவையை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது நெடுந்தீவுக்கான படகுச் சேவை திங்கள், வெள்ளிக் கிழமைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனை மேலும் ஒரு நாள் கூடுதலாக நடத்தவேண்டும் எனவும்.

அரச ஊழியர்களின் நன்மை கருதி திங்கட்கிழமைகளில் நடைபெறும்சேவையை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்ற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் நெடுந்தீவுப் படகுச் சேவையை நடத்துவதற்கு தடையாக உள்ள டீசல் பிரச்சினையை நீக்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(இ-111-6)

## இருபாலையில் உருவப்படங்கள்

கோப்பாய், நவ. 27

கோப்பாய். இருபாலைச் சந்தியில் வீரமரணமடைந்த [illegible] கள் அவர்களின் பெற்றோர் கள்ளால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. (ஓ-72)


## கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு அறிவித்தல்

தெரிவு செய்யப்பட்ட நோயாளரின் கொழும்புப் பயணம் திட்டமிட்டவாறு நாளை புதன்கிழமை (28-11-90) தவிர்க்க முடியாத காரணங்களினால் மீண்டும் பின் போடப்பட்டுள்ளது.

கப்பல் ஆயத்தமானதும் குறுகிய கால அறிவித்தலில் (24 மணிநேரம்) நோயாளிகள் பயணம் செய்யத் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பின்வரும் நோயாளிகள் அல்லது அவர்களுடன் கூடச் செல்பவர்கள் புதன் (28-11-90) காலை 8 மணிக்கு பணிப்பாளர் காரியாலயத்திற்கு தவறாது சமுகம் தரத்தவறினால் அவர்களின் இடத்திற்கு வேறு நோயாளிகள் சேர்க்கப்படுவார்கள்

1. வே. யோகேஸ்வரன் (காரைநகர்), 2 அ புவனேஸ்வரி (இந்து மகளிர் வீதி), 3. இராணி அம்மா (பருத்தித்துறை), 4. K. தெய்வேந்திரம் (பருத்தித்துறை), 5. திருமதி பிரான்சிஸ் (யாழ் நகர்) 6 துரைராஜா (ஓட்டிசுட்டான்).

- பணிப்பாளர்

யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
26 - 11 - 1990 [சி-5460]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழிலார்ந்த நினைவுத் தூபி



மாவீரர் வாரம் மக்களின் அரசியல் எழுச்சியை மட்டுமன்றி கலை எழுச்சியையும் உற்பவித்துள்ளது. ஈழத் தமிழ் மண்ணில் உள்ள பல துறை சார்ந்த கலைஞர்களுக்கும் புதிய உத்வேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

மாவீரர் வாரத்தையொட்டி திராவிடக் கலையம்சங்களுடன் அமைக்கப்பட்ட நினைவுத் தூபிகளில் ஒன்றையே மேலே காண்கிறீர்கள். திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியில் கம்பீரமாக எழிலார்ந்து நிற்கும் இந்த 28 அடி உயரத் தூபியை நாளாந்தம் ஆயிரக் கணக்கான மக்கள் கண்டு களிக்கிறார்கள்.

நான்கு வாசல்களையும், பல போராட்டக் காட்சிகளையும் கொண்ட இந்தக் கலைப் படைப்பை "தீர்சிகா" கலைக் கூடத்தினரும், பத்திரகாளி கோவிலடி இளைஞர்களும் சேர்ந்து உருவாக்கினர். (அ)

# 10 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியர்கள் இடமாற்றம்?

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் சேவையாற்றிய ஆசிரியர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் பத்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களை வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம்செய்யும் நோக்குடனேயே இந்த விவரம் கோரப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (உ-6)

# பிரதான வீதிகளில் மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் வார இறுதி நாளான இன்று இரத்த தானம், மரம் நடுகை போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

குடாநாட்டின் பல பாகங்களிலும் பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் பயன்தரு, நிழல்தரு மரங்கள் இன்று நட்டு வைக்கப்படும்.

இரண்டாயிரத்துக்கும் அதிகமாக அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் மரக்கன்றுகளை மாவீரர்களின் பெற்றோர்கள் நட்டு வைப்பர்.

மாவீரர் நாளையொட்டி சில அமைப்புகள் இரத்த தானம் வழங்க முன்வந்துள்ளன. (ஒ-3)

# உணர்வுபூர்வ நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் வாரத்தின் ஆறாம் நாளான நேற்று குடாநாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் மாவீரர் தின நிகழ்ச்சிகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

மாணவர்களின் நாடகங்கள், பட்டி மண்டபம், நடனம், பாட்டு, பேச்சு முதலான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சமகால நிகழ்வுகளையும், தற்போதைய கல்விக்கொள்கையில் உள்ள குறைபாடுகளையும் விளக்கும் வகையில் அமைந்திருந்தன.

இந்த நிகழ்ச்சிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். (ஒ-6)

## இலவச பஸ் பயணம்

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் நாளான இன்று வட பிராந்திய மினிபஸ் சங்கத்தினர் இலவச மினிபஸ் சேவையை வழங்கவிருக்கின்றனர்.

மாவீரர் நாள் தொடர்பான முக்கிய கூட்டங்கள் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்கு பொது மக்களை இலவசமாக அழைத்துச் செல்லும் பணியில் மினிபஸ்கள் ஈடுபடும். (உ-6)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 27

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்ரினன்ட் வினஸ் (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன் - வல்வெட்டித்துறை) வீரமரணமடைந்தார்.

கடந்த 13 ஆம் திகதி காங்கேசன்துறையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த மகாராஜா (அருமைத்துரை இந்திரன் - வெற்றிலைக்கேணி) என்ற போராளியும் நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். (உ)

## நீடிப்பு

யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் "தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு" புகைப்படக் கண்காட்சி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### யாழ், குடா,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பல விடுதலை வேங்கைகள் இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றினர்.

கோட்டையில் நடந்த நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, கலை, கலாசாரப் பிரிவு பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரட்ணதுரை உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்றினர்.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் போது மாவீரர் சுடர் ஏற்றியது தொடர்பான செய்திகள் குடாநாட்டின் நாலாபுறத்திலும் இருந்தும் உதயன் அலுவலகத்துக்குக் கிடைத்தவண்ணம் இருந்தன.

### கோமரங்கடவல...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரவைகள் - 60, ஏ. கே. ஹோல்ஸர் - 2 ஆகியன தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இரண்டாவதாக நடந்த மோதலில் அலெக்ஸ் (சிவநாயகம் ரஜினிகாந்த்- திருகோணமலை), அத்தார் (இராசையா நவரத்தினம்- திரியாய்), பீலிஸ் (கும்புறுப்பிட்டி), நிமால் (முருகையா காந்தரூபன் - திருமலை), ரிச்சர்ட் (பேரின்பராஜா விஜயராஜா - நிலாவெளி) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தார்கள். (உ)

### மாங்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புலிகள் மீது மற்றொரு பெரும் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கடந்தவாரம் கூறியிருந்தார். அதற்கு முந்திக் கொண்டு விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர். மாங்குளம் முகாமை வீழ்த்தியிருப்பது அமைச்சர் ரஞ்சனையும் அவரது பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது என மற்றொரு செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது. (உ-3-6)

### 300 க்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் முகாம் தகர்ப்பு பற்றிய செய்திகளுக்கு நேற்று மிக முக்கியத்துவமளித்த வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸிகள், தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமான பின்னர் ஸ்ரீலங்கா படைகளுக்கு மோசமான இழப்பை ஏற்படுத்திய போராளிகளின் மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கை இது என்று குறிப்பிட்டன.

இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளின் பெரும் பலத்தை வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவை குறிப்பிட்டன. (உ)

# அதிகாலை பலபகுதிகளிலும் மாவீரர் தினப் பேரொளி

### யாழ்நகரில்

மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சி யாழ். நகரிலும் சிறப்பாக நடைபெற்றது.

கொட்டும் மழைக்கும் மத்தியில் மக்கள் இந்நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் முன்னாலும் தீப்பந்தங்கள் எரிந்தன.

யாழ். இந்துக் கல்லூரிக்கு உள்ளே நடைபெற்ற மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பெரும் திரளாகப் பங்குபற்றினர்.

### யாழ் செயலகப் பகுதியில்

அதிகாலை 12 03 மணிக்கு யாழ் செயலகத்தில் ஊழியர் சி. ஆறுமுகம் விளக்கு ஏற்றி வைத்தார்.

கச்சேரி பழைய பூங்காவைச் சுற்றிவர விளக்கேற்றப்பட்டிருந்தது.

இப்பகுதியை அண்டிய கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மணிகள் ஒலித்தன.

ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கன்னியாஸ்திரி ஒருவர் விளக்கேற்றி வைத்தார்.

### நல்லூரில்

நல்லூர் கந்தசுவாமி கோயில் உட்பட அப்பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் நேற்று நள்ளிரவு 12.01 மணிக்கு மணிகள் ஒலி ஒலித்தன.

வீடுகளிலும், வீதிகளிலும் தீப்பந்தங்கள் கொழுந்துவிட்டெரிந்தன.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் 5 கோபுர மணிகளும் ஓங்கி ஒலித்த ஒலி கொட்டும் மழையையும் மீறி நீண்ட தூரத்துக்குக் கேட்டது.

மாநகரசபை அலுவலகத்தில் ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தீப்பந்தத்தை ஏற்றி வைத்தார். ஊழியர்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இந்து வீதியிலுள்ள மின்பொறியியலாளர் அலுவலகத்திலும் தீபம் ஏற்றப்பட்டது.

யாழ். கல்வி அலுவலகத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தீப்பந்தத்தை ஏற்றி வைத்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இரவு 9 மணி முதல் 12 மணி வரை பஜனை இடம்பெற்றது. (ஒ)

### முத்திரைச்சந்தையில்

சங்கிலியன் சிலையைச் சுற்றி விளக்குகள் எரிந்தன.

முத்திரைச்சந்தைப் பகுதியில் நின்ற வாகனங்கள், கடைகளில் புரட்சிக்கீதங்கள் ஒலித்தன.

### கல்வியங்காட்டில்

கல்வியங்காடு பகுதி வீடுகளில் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்ததோடு, வானொலியில் புரட்சிக்கீதங்கள் ஒலித்தன. அப்பகுதி எங்கும் களைகட்டியிருந்தது.

கல்வியங்காட்டுச் சந்தியில் செல்லக்கிளி படத்துக்கும், திலீபனின் தூபி ஆகியவற்றிற்கும் ஜெனரேட்டர் மூலம் மின்ஒளி பாய்ச்சப்பட்டிருந்தது.

### மாவீரர்,...

நிகழ்ச்சியில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். தீப்பந்தங்கள் ஏற்றும் வேளை அவர்களது கண்களில் நீர் பனித்தது.

மழை பெய்த போதிலும் கொட்டிலுக்குள் இந்தத் தீப்பந்தங்கள் எரிந்து அந்தப் பகுதியையே ஒளிமயமாக்கியது.

இதேபோல் தென்மராட்சி, வடமராட்சி, தீவுப் பகுதிகளிலும் தீப்பந்தங்கள் ஏற்றி வைக்கப்பட்டதாகத் தெரியவந்தது. (ஒ)

### இருபாலையில்

இருபாலையில் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க வளவு முழுவதும் தீப்பந்தங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### கோப்பாயில்

கோப்பாய், இருபாலை, கல்வியங்காடுப் பகுதிகளிலும் வீடுகள் தோறும் தீப்பந்தங்கள் பிரகாசித்தன. அப்பகுதி வீதிகளும் தீப்பந்தங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

### திருநெல்வேலியில்

யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் விளக்கேற்றிவைத்தார்.

திருநெல்வேலிப் பகுதி தீப்பந்தங்களால் பிரகாசமாக காட்சிதந்தது. வீடுகளில் மட்டுமன்றி மதில்களின் மேலும் விளக்குகள் வரிசையாக எரிந்தன.

விவசாய பயிற்சி நிலையத்திலும் திரு. தருமலிங்கம் தீபம் ஏற்றிவைத்தார்.

திருநெல்வேலி ப. நோ. கூ. சங்க அலுவலகத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### மானிப்பாயில்

மானிப்பாயில் நள்ளிரவு 12 மணி வரை இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சரியாக 12.01 மணிக்கு ஆலய மணிகள் ஒலித்தன.

அங்கு வர்த்தக நிலையங்கள் முக்கிய சந்திகள் உட்பட பல இடங்களிலும் மாவீரர் சுடர் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சுதுமலை அம்மன் ஆலய சூழலும் மாவீரர் சுடரால் ஒளிர்ந்தது.

ஆனைக்கோட்டை, கூழாவடி முதலான பகுதிகளிலும் நள்ளிரவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### சுன்னாகம் முதல் கொக்குவில் வரை

காங்கேசன்துறை வீதியில் வீடுகள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள் ஆகியவற்றில் மாவீரர் தீபங்கள் ஏற்றப்பட்டன.

சுன்னாகத்தில் ப. நோ. கூ. சங்கம், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் முன்பும்—

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி உட்பட பொது இடங்கள் பலவற்றிலும்—

இணுவில் கந்தசுவாமி கோயில், இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் ஆகியவற்றின் முன்பும்—

கோண்டாவில் ஆலயங்கள் சந்திகள், சனசமூக நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றிலும்—

கொக்குவில் முதல் யாழ் நகர்வரை உள்ள வீதியோர வீடுகள் ஆகியவற்றிலும் மாவீரர் சுடர்கள் பிரகாசித்தன.

### கன்னாதிட்டியில்

யாழ். நகரில் உள்ள கன்னாதிட்டி சந்தியில் இன்று அதிகாலை மாவீரர் தினம் பிறந்ததை ஒட்டி பஞ்ச வர்ணத்திலான விளக்குகள் பல வடிவங்களில் ஏற்றப்பட்டிருந்தன.

கண்ணைப் பறிக்கும் வண்ண நிறங்களில் இவை அமைந்திருந்தன.

கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்திலும் ஊழியர்கள் மாவீரர் சுடர் ஏற்றினர்.

### சங்கங்களில்

யாழ். குடாநாட்டில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 50 தீப்பந்தங்கள் எரித்து மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் யாவரும்வேட்டி, சட்டையுடன் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org